# குறைந்த நிலத்தில்... நிறைந்த மரங்கள்!

10.09.2012



நாகலிங்கம்



செஞ்சந்தனம்



கொடம்புலி



சில்வர் ஓக்



மாசிலாமணி



தென்னை மரங்களுக்கு இடையே மரக்கன்றுகள்...

தண்ணீர் தட்டுப்பாடு, ஆட்கள் பற்றாக்குறை, விலை வில்லங்கம் ஆகிய காரணங்களால் விவசாயத்தை வெறுப்பவர்களுக்கு நம்பிக்கைக் கொடுத்து வருவது.. மரம் வளர்ப்பு, அதிக இம்சை இல்லாமல் நல்ல வருமானம் கிடைப்பதால், மர சாகுபடிக்கு மாறும் விவசாயிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருக்கிறது. அவர்களில் ஒருவராக மரங்களை சாகுபடி செய்து வருகிறார், காஞ்சிபுரம் மாவட்டம், கைத்தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த மாசிலாமணி. இவர், குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் மரங்களை வளர்த்து வருவது கூடுதல் சிறப்பு!

தேக்கு கொடுத்த ஆசை!

எங்க அப்பா 24 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துதான் எங்களை படிக்க வைத்தார். ஆனால், வேலையாள் பிரச்சினை, தண்ணீர் தட்டுப்பாடு, என்று விவசாயம் செய்வதே பிரச்சினையாதான் இருந்தது. அந்த நேரத்தில்தான் நான் எம்.ஏ. முடித்துவிட்டு செங்கல் சூளை ஆரம்பித்தேன். சொத்துகளை பாகம் பிரித்த போது எனக்கு ஆறு ஏக்கர் கிடைத்தது. சூளையில் எனக்குப் போதுமான வருமானம் கிடைத்ததால், விவசாயத்துப் பக்கம் போகவில்லை. எங்களோட வீட்டைச் சுற்றி தேக்கு மரங்களை நட்டு வைத்திருந்தார் அப்பா. அவைகளுக்கென்று தனியாக எந்த கவனிப்புமே இல்லாத போதும்.. நன்றாகவே வளர்ந்திருந்தது. தண்ணீர் கூட தனியாக ஊற்றியது கிடையாது.

அதைப் பார்த்துதான்... சும்மா போட்டு வைத்திருக்கும் நிலத்தில் மரங்களையாவது வளர்க்கலாம் என்று ஆசை வந்தது. மரம் வளர்ப்பு பற்றி, வனத்துறை கொடுத்த பல பயிற்சிகளிலும் கலந்து கொண்டு மரம் வளர்ப்பில் இறங்கினேன்.

வனத்துறை மூலமாக மரம் வளர்க்கும் விவசாயிகளுக்காக 2007 ம் வருடம் ஒரு சங்கத்தைத் தொடங்கினார்கள். அதற்கு என்னைத் தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். சங்கம் மூலமாக, இதுவரைக்கும் பள்ளிக்கூடங்களில் நடுவதற்கு 5,000 மரக்கன்றுகளைக் கொடுத்திருக்கிறோம் என்றார்.

**தென்னைக்கிடையில் ஊடுபயிர்!**

என்னோட ஆறு ஏக்கரில் 2 ஏக்கர் 30 சென்ட்டில் நெல் சாகுபடி செய்து கொண்டிருக்கிறேன். ஒரு ஏக்கர், 70 சென்ட் நிலத்தில் 110 தென்னை மரங்கள் இருக்கு. இதற்கு பத்து வயதாகிறது. தென்னைக்கு இடையில் மகோகனி, செஞ்சந்தனம், பலா, மா, ரோஸ்வுட், வில்வம், வேங்கை, குமிழ், நெல்லி என்று 750 கன்றுகளை நடவு செய்திருக்கிறேன். இவையில்லாமல் வரப்பிலும் 750 மகோகனி கன்றுகளை வைத்திருக்கிறேன். மொத்தமாக தென்னையோட சேர்த்து 1,500 மரங்கள் இருக்கு. ஒரு வருடத்திற்கு முன் இரண்டு ஏக்கரில் தனியாகவும் மகோகனி நடவு செய்திருக்கிறேன்.

**காலத்தே பயிர் செய்!**

எந்த மண் வகையாக இருந்தாலும், அதில் மரங்களை வளர்க்க முடியும். ஆனால், தண்ணீர் தேங்காமல் இருக்க வேண்டியது அவசியம். ஆகஸ்ட் முதல் ஜனவரி வரை உள்ள மழைக் காலங்களில் செடிகளை நடவு செய்தால், இழப்பு குறைவாக இருக்கும். வரப்பு ஓரங்களில் 7 அடி இடைவெளியும், ஊடுபயிர் மற்றும் தனிப்பயிராக நடவு செய்யும் போது 10 அடி இடைவெளியும் விட்டு நடவு செய்யலாம். 2 கன அடி அளவிற்க்குக் குழி எடுத்து, 5 நாட்கள் ஆறப்போட வேண்டும். பிறகு ஒவ்வொரு குழியிலும் 5 கிலோ தொழுவுரம், அரை கிலோ மண்புழு உரம், 50 கிராம் அசோஸ்பைரில்லம், 50 கிராம் பாஸ்போ – பாக்டீரியா, கொஞ்சம் வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து கொட்டி, குழியை மூடி, மையத்தில் நடவு செய்ய வேண்டும்.

**6 மாதங்களுக்கு ஓர் உரம்!**

வரப்பு ஒரங்களில் நடுவதற்கு மகோகனி ஏற்றது. அதிகளவில் மரங்களை நட ஆசைப்பட்டால், படர்ந்து வளரக்கூடிய இரண்டு மரவகைகளுக்கு இடையில், நேராகச் செல்லக்கூடிய ஒரு ரகத்தை நடவு செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் நெருக்கடியைக் குறைக்கலாம். 10 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் அவசியம். 6 மாதங்களுக்கு ஒரு முறை செடியிலிருந்து அரையடி தள்ளி, அரையடி அகலத்தில் வட்டப்பாத்தி எடுத்து, 5 கிலோ தொழுவுரம், அரை கிலோ மண்புழு உரம் ஆகியவற்றைக் கலந்து வைத்து மண் அணைக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பக்கக் கிளைகளை வெட்டி விட வேண்டும்.
இந்த விஷயங்களை மட்டும் சரியாகக் கடைபிடித்தாலே.. மரங்கள் நன்கு வளர்ந்து விடும். ஒவ்வொரு மரத்திற்கும் முதிர்வுக் காலங்கள் மாறுபடும். விரைவாக அறுவடைக்கு வரும் மரங்களை வெட்டும் போது... தோட்டத்தில் நெருக்கடி விலகி, மற்ற மரங்களக்குத் தேவையான இடைவெளி கிடைத்துவிடும்.

**நிச்சயமான வருமானம்!**

குமிழ், மலைவேம்பு... போன்ற மரங்களை 7 முதல் 10 ஆண்டுகளில் அறுவடை செய்யலாம். இந்த மரங்கள் ஒவ்வொன்றும் 6 ஆயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகும். வேங்கை, மகோகனி, ரோஸ்வுட், தேக்கு, புன்னை.. மாதிரியான மரங்கள், 15 முதல் 20 வருடத்தில் அறுவடை செய்யலாம். இந்த மரங்கள் ஒவ்வொன்றும் 20 ஆயிரம் ரூபாய் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகும். சந்தனம், செஞ்சந்தன மரமெல்லாம் 25 வருடத்திற்கு மேல் அறுவடைக்கு வரும். ஒவ்வொன்றும் 1 லட்சம் முதல் ஒன்றரை லட்ச ரூபாய் வரை விலை போகும். மொத்தத்தில் தோட்டத்தில் இருக்கும் மரங்கள், பேங்க் வைப்பு நிதியை விட அதிக வருமானம் தரக்கூடியது. 7 வருடத்திற்கு மேல் நிச்சய வருமானத்தைத் தரக்கூடியது என்றார் மகிழ்ச்சியாக.

**தொடர்புக்கு**
**மாசிலாமணி, செல்போன் : 94436 – 38545.**